(3) தகவல் கோரல்.

அவையில் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டியவைகள் குறித்து.

திரு. க. சுப்பு : இன்றைக்குக் கேள்வி நேரம் உண்டா, இல்லையா ? கேள்வி நேரம் இல்லை என்றால் அதற்கு ரெசலூஷன் மூவ் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 27-ந் தேதியே முடிவு செய்யப்பட்டு, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதனால் இன்றைக்கு மீண்டும் தீர்மானம் கொண்டுவர வேண்டியதில்லை.

திரு. க. சுப்பு : விதிப்படி தீர்மானம் இன்றைக்குத்தான் கொண்டுவரப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியில் அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தபோதிலும் அவையில் முடிவு எடுத்துவிட்டால் அதைத்தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். 'கால் அட்டன்ஷன்' கூட அப்படி விதியை ரிலாக்ஸ் செய்து எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே,

* * * *

அதனால் ரூல் 42-ன் கீழ் நான் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

* * * *

Mr. SPEAKER: Raise the point alone, don't go into the details. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்னவென்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. ரா. உமாநாத் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சனை என்ன என்பதை மட்டும் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். விவரங்களை எல்லாம் இப்போது பேசக்கூடாது. அப்படி பேசியவைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன். நான் கொடுத்தது என்னவாயிற்று என்று மட்டும் கேளுங்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 29]

திரு. ரா. உமாநாத் : அந்த விஷயமாக 42-வது விதியின் கீழ் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்திருக்கிறேன். இது ஒரு முக்கியமானப் பிரச்சனை. ஆகவே, அதைத் தாங்கள் இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக 42-வது விதியின்கீழ் நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை என்பதால் அதை இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலை 8-22 மணிக்குத்தான் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதை அரசின் கவனத்திற்கு அனுப்பியிருக்கிறேன். அவர்களிடமிருந்து பதில் வந்ததும் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இதே பிரச்சனை சம்பந்தமாக விதி 42-ன் கீழ் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பிரச்சனைக்கு ஏற்கெனவே தீர்ப்புச் சொல்லிவிட்டேன்.

Thiru K. SUPPU : Rule 186 ; A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon....என்று இருக்கிறது. இன்று 'கோஸ்டின் அவர்' இல்லை.

திரு. ரா. உமாநாத்: 8-22-க்குத்தான் தீர்மானம் கொடுத்ததாகச் சொன்னீர்கள். இந்தப் பிரச்சனை சில நாட்களாகவே சீரியஸாக இருக்கிறது. இது ஒரு புதிய பிரச்சனை அல்ல. ஆகையால் அரசாங்கத்திற்கு இதுபற்றிய தகவல் முழுமையாகத் தெரிந்திருக்கும் ; உடனே பதில் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே இந்தப் பிரச்சனையைப்பற்றி இந்த அவையில் பேசப்பட்டிருக்கிறது. அரசு தரப்பில் ஏற்கெனவே தெரிந்திருந்தாலும், இதுபற்றி விவாதிக்கப்பட்டிருந்தாலும் அரசின் கவனத்திற்கு தாங்கள் கொடுத்ததைக் கொண்டு சென்றிருக்கிறேன். நாளை அதைப் பற்றிச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற விதிகள் மிகத் தெளிவாக இருக்கின்றன. "....A Member shall not raise a point of order to ask fo

information. . . '' ஆகவே மாண்புமிகு திரு. உமாநாத் போன்றவர்கள் இங்கே பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்பி இது குறித்து கேட்பதற்கு விதிகளிலே இடம் இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நான் கேட்கவில்லை. வற்புறுத்தினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது என்னுடைய கவனத்திற்கு வந்தது. அதனை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : This is not a question of seeking information. This is only a submission.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்பர்மேஷனோ அல்லது சப்மிஷனோ எதுவாக இருந்தாலும் தலைவர் அனுமதி கொடுத்த பிறகுதான் எடுத்துக்கொள்ள முடியும்.

THE HON. THIRU S. RAMACHANDRAN : The submission can be made by the Hon'ble Members always to the Chair. It is for the Chair to dispose of that.

(கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்பர்மேஷன், சப்மிஷன் என்று என்னிடம் தகவல் அறிந்துகொள்வது வேறு, கோரிக்கையாக வைப்பது வேறு. நான் திரு. உமாநாத் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு பதில் சொல்லுகின்ற போது அவர் கொடுத்தது என்னுடைய ஆய்விலே இருக்கிறது என்று சொன்னேன். இன்றைக்கு அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. அரசின் தரப்பிலே இருந்து வந்த பிறகு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாமா என்பது பற்றி நாளை தெரிவிக்கிறேன். இதற்கு மேல் அதிலே பேசக் கூடாது.

திரு. எம். ஏ. லத்தீப் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசக்கூடாது, உட்காருங்கள்.

(கூச்சல், குழப்பம்.)

திரு. ரா. உமாநாத் : * * * நான் ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்திருந்தேன். அதன் முக்கியத்துவத்தைக் கருதி உடனடியாக அது எடுத்துக்கொள்ளப்படாததன் காரணத்தால், அனுமதி கொடுக்கப்படாததன் காரணத்தால் நாங்கள் சிறிது நேரம் வெளிநடப்பு செய்கிறோம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 29]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, * * * அரசாங்கத்தின் நடவடிக்கை திருப்திகரமாக இல்லை என்ற காரணத்தால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசாங்கத்திறகு தக்க விவரங்கள இல்லை. * * *

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, * * * நாங்கள் 42-விதியின கீழ் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். (குறுக்கீடு-கூச்சல், குழப்பம்.) * * *

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, * * * ஆகவே இது சம்பந்தமாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆறுமுகம் அவர்களும் மற்றவர்களும் வெளிநடப்பு செய்கிறேன் என்று கூறி இருந்தால் அது இருக்கட்டும், மற்றவைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன். அதுபோன்றுதான் திரு. ஜேம்ஸ் அவர்களும் மற்ற விஷயங்களைப் பேசி இருந்தால் அவைகளையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிக்க முடியாது. அடுத்து மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அதன் அறிக்கையை அளிப்பார்.

(2.) அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி.

(ஆ) மதிப்பீட்டுக் குழுவின் 8-வது அறிக்கை.

திரு. கா. செங்கோடன் : தலைவரவர்களே, மருத்துவ மனைகள் மற்றும் மருந்தகங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த குழுவின் 8-வது அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெவித்துக்கொள்கிறேன்.

(4) அரசினர் தனித் தீர்மானம்.

விற்பனை வரி (மேல் வரி) சட்ட விஸ்தரிப்பு குறித்து.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 1-ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் (b) பகுதியின் கீழ் வெளியிடக் கருதப்பட்டுள்ள கீழ்க்காணும் அறிவிப்பின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 1-ஆவது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்பட வேண்டும்",

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.